இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 329 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 25 – புதன்கிழமை 09 ஜூலை 2025 – மதுரை 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 329 : Thiruvalluvar Year - 2056 - Aani 25 - Wednesday 09 July 2025 - Madurai 16+8 Pages ₹ 5.00

## இன்றும் நாளையும்

# திருவாரூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் களஆய்வு!

## முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறார்!

**திருவாரூர், ஜூலை 9- மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமான திருவாரூருக்கு தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் (09.07.2025) நாளையும் (10.07.2025.) அரசு முறைப் பயணமாக வருகை தருகிறார். முதல்வர் அவர்கள், நலத்திட்டப் பணிகளின் கள ஆய்வுகளையும், கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், அரசு கட்டிடங்கள் திறப்பு விழா, பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் விழா பேருரை ஆற்றவிருக்கிறார்.**

இந்திய துணைக்கண்டம் மட்டுமின்றி உலக நாடுகளே போற்றும் உன்னத ஆட்சி தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (09.07.2025) திருவாரூர் மாவட்டம் வருகிறார். மதியம் திருவாரூர் வந்தடையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கோட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மரியாதை செலுத்தி, திருவாரூர் பகுதிகளில் “ரோட்ஷோ” மூலம் பொதுமக்களைச் சந்திக்கிறார்.

தமிழ் கூறும் நல்லுலகில் தமது 14 வயதில் புலிக்கொடி ஏந்தி, மொழி காக்கும் போராட்டத்தை துவக்கி தனது 92 வயது வரை “வாழ்நாள் போராளி”யாகவே வாழ்ந்து, கோடானு கோடி மக்களின் இதயங்களில் வாழும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தோன்றியதால் பெருமை பெற்ற திருவாரூர், கலைஞர் அவர்களாலேயே திருவாரூர் மாவட்டமாக உருவாக்கப்பட்டதால் மேலும் சிறப்புற்றது.

கல்லூரிகள், கட்டமைப்பு வசதிகள், ஓடாத ஆழிதேரை ஓடவைத்த பெருமை, அந்த தேரோட கான்கிரீட் சாலைகள், அதில் புதைவட மின் பாதைகள் அமைத்த சிறப்பு, பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் வளாகம், நீதிமன்ற வளாகம், அனைத்து வசதிகளுடனான மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மத்திய பல்கலைக் கழகம் இப்படி திருவாரூரை உலக அரங்கில் அடையாளப்படுத்தி, காட்டூரில் கலைஞர் கோட்டமாக உயர்ந்து நிற்கும் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவாரூரில் திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

### கம்பீரமான கலைஞர் சிலை!

திருவாரூருக்கு மட்டுமல்ல; முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை, அதன் அமைப்பால், சுற்றி எழுப்பப்படும் மணி மண்டபத்தால், உயர்ந்தோங்கி நிற்கும் கம்பீரத்தால், உலகிற்கு திருவாரூரை அடையாளப்படுத்திய கலைஞர் அவர்களின் சிலையானது, ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கே அடையாளமாக உயர்ந்து நிற்கப்போகும் அந்த பிரமாண்ட சிலையினை, திராவிட நாயகர், முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (09.07.2025) திறந்து வைக்கிறார்.

நாளை (10.07.2025) நடைபெறும் அரசு நிகழ்சிகளில் பங்கெடுக்கும் முதல்வர் அவர்கள் பல்வேறு முடிவடைந்த அரசு கட்டிடங்களை திறந்து வைத்து பின்னர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றுகிறார்.

விழாவில் கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், தலைமைக் கழக நிர்வாகிகளும், மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### “ஓரணியில் தமிழ்நாடு” - எனும் மாபெரும் திட்டம்!

# 5 நாட்களில் 31 லட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு!

## பொதுமக்கள் ஆர்வமுடன் இணைந்து வருகின்றனர்!

**சென்னை, ஜூலை 9 - “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் உறுப்பினர் சேர்க்கை திட்டம் தொடங்கப்பட்டு 5 நாட்களில் 31 லட்சம் பேர் புதிய உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.**

ஒன்றிய மோடி அரசு தமிழ்நாட்டுக்கு எதிராக கீழடி உண்மைகள் மறைப்பு, இந்தித் திணிப்பு, கல்வி நிதி மறுப்பு போன்ற எல்லா வகையிலும் தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது.

பா.ஜ.க.வின் சூழ்ச்சியிலிருந்து தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, “ஓரணியில் தமிழ்நாடு” எனும் மாபெரும் முன்னெடுப்பை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “ஓரணியில் தமிழ்நாடு” எனும் பிரச்சார இயக்கத்தை ஜூலை முதல் நாளன்று தொடங்கிவைத்தார்கள். மக்களின் பேராதரவுடன் “ஓரணியில் தமிழ்நாடு இயக்கம்” மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

3.7.2025 அன்று காலை சென்னை ஆழ்வார்ப்பேட்டை பகுதியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தானே களத்தில் இறங்கி சென்னை ஆழ்வார்பேட்டையில் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்தார். அதுமட்டுமின்றி கழகத் தலைவர் அவர்கள், திருப்பூர் மாவட்டம், தென்காசி மாவட்ட கழகத் தோழர்கள் - நிர்வாகிகளுடன் ஓரணியில் தமிழ்நாடு தொடர்பாக தொகுதி நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர்களும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் தி.மு.க. நிர்வாகிகளும் வீடுவீடாகச் சென்று தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி, உறுப்பினர்களாக சேர்த்து வருகின்றனர்.

“ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை திட்டம் மாநிலம் முழுவதும் 45 நாட்களுக்கு நடைபெறும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிவித்தார்.

இந்நிலையில் ஓரணியில் தமிழ்நாடு தொடங்கிய 5 நாட்களிலேயே 31 லட்சம் புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

தி.மு.க. அரசின் திட்டங்களால் பயனடைந்த ஏராளமானோர் “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை இயக்கத்தில் ஆர்வமுடன் இணைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றம் ஜூலை 21-ல் கூடுகிறது!

## முக்கியப் பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டம்!

*டெல்லி, ஜூலை 9 - ஜூலை 21ல் தொடங்குகிறது நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆகஸ்ட் 12 வரை நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு முக்கியப் பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டம் வகுத்துள்ளன.*

*நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில், மருத்துவ கல்லூரிகளுக்கான அனுமதியில் நடைபெற்ற மோசடி, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க புதிய விதிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.*



*நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 21ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 12ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 13 முதல் 17 தேதி வரை 5 நாட்கள் தொடர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த கூட்டத் தொடரில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க புதிய விதிமுறைகள், பஹல்காம் தீவிரவாத தாக்குதல், அமெரிக்காவின் வரிவிதிப்பு மூலம் ஏற்படும் பொருளாதார பாதிப்பு, தொடர் விலைவாசி உயர்வு, மருத்துவ கல்லூரிகளுக்கான அனுமதி மோசடி உள்ளிட்ட பல பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.*

*இதேபோல், டெல்லியில் உள்ள வீட்டில் பண மூட்டைகள் கைப்பற்றப்பட்ட விவகாரத்தில் நீதிபதி யஷ்வந்த் வர்மாவிற்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானமும் இக்கூட்டத்தொடரில் கொண்டு வரப்படும் என தெரிகிறது. இதனால் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

